செ.வெ.எண்-60 நாள்-23.02.2021

# அரியலூர் மாவட்டம்

# 134 ஏழை பெண்களுக்கு ரூ.52 இலட்சத்து 75 ஆயிரம் மதிப்பிலான திருமண நிதியுதவி மற்றும் திருமாங்கல்யத்திற்கு தங்க நாணயங்களை மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன் அவர்கள் வழங்கினார்கள்.

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், மாவட்ட சமூக நலத்துறையின் சார்பில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் திருமண நிதியுதவித் திட்டம் மற்றும் திருமாங்கல்யத்திற்கு தங்கம் வழங்கும் நிகழ்ச்சியில் பயனாளிகளுக்கு திருமண நிதியுதவியுடன் தாலிக்கு தங்கம் நாணயங்களை மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா **திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இஆப.,** அவர்கள் தலைமையில் வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில், ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் **திரு.ஜெ.கே.என்.இராமஜெயலிங்கம்** அவர்கள் முன்னிலை வகித்தார்கள்.

22.02.2021 அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில், பள்ளி 10ஆம் வகுப்பு முடித்த 57 ஏழை பெண்களுக்கு தலா ரூ.25 ஆயிரம் வீதம் ரூ.14 இலட்சத்து 25 ஆயிரம் மதிப்பிலான நிதியுதவியும், பட்டப்படிப்பு முடித்த 77 ஏழை பெண்களுக்கு தலா ரூ.50 ஆயிரம் வீதம் ரூ.38 இலட்சத்து 50 ஆயிரம் மதிப்பிலான நிதியுதவியும் ஆகமொத்தம் **134 ஏழை பெண்களுக்கு ரூ.52 இலட்சத்து 75 ஆயிரம்** மதிப்பிலான நிதியுதவியும், தலா 8 கிராம் 1072 கிராம் திருமாங்கல்யத்திற்கு தங்கமும் சமூக நலத்துறையின் மூலம் வழங்கப்படுகிறது.

**இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா அவர்கள் பேசியதாவது :-**

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் நடக்கும் தமிழக அரசு பெண்கள் முன்னேற்றததிற்காக பல எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. மாண்புமிகு அம்மா அவர்கள் பெண்கல்வியை ஊக்கப்படுத்தவும், பெண்கள் சிறப்பாக வாழவும், பல்வேறு திட்டங்களை கொண்டு வந்தார்கள். அதில் சீர்மிகு திட்டமான ஒன்றுதான் திருமாங்கல்யத்திற்கு நிதியுதவிடன் தங்கம் வழங்கும் திட்டம். இத்திட்டம் மூலம் இன்று பல்லாயிறக்கணக்கான ஏழை எளிய பெண்கள் வாழ்க்கையில் ஒளியேற்றப்பட்டுள்ளது. பெண்கள் கல்வி இடைநிற்றலை தவிர்க்கப்பட்டு பட்டப்படிப்பு வரை பெண்கள் கல்வி கற்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 10ஆம் வகுப்பு படித்த பெண்களுக்கு ரூ.25,000/-க்கான காசோலையும், 8 கிராம் தங்க நாணயமும், பட்ட படிப்பு படித்த பெண்களுக்கு ரூ.50,000/-க்கான காசோலையும், 8 கிராம் தங்க நாணயமும் வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், விவசாய பெருங்குடி மக்களின் துயர்துடைக்கும் வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்பேரில், அரியலூர் மாவட்டத்தில் உள்ள 64 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் உள்ள 30,542 விவசாயிகளுக்கு ரூ.224.98 கோடி விவசாய பயிர்கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. எனவே, இத்திட்டங்கள் போன்று பல முத்தான திட்டங்களை தீட்டி செயல்படுத்தி வரும் தமிழக அரசுக்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா **திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்கள் பேசினார்கள்.

இவ்விழாவில், மாவட்ட ஊராட்சிக்குழுத்தலைவர் பொ.சந்திரசேகர், மாவட்ட வருவாய் அலுவலர் இரா.ஜெய்னுலாப்தீன், மாவட்ட சமூக நல அலுவலர் சாந்தி, ஒன்றியக்குழுத்தலைவர் செந்தமிழ்செல்வி, சமூக நல விரிவாக்க அலுவலர் சாந்தி மற்றும் அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**